# உடல் எடை குறைக்க லேபராஸ்கோபி அறுவை சிகிச்சை

## கே.எம்.சி.ஹெச். டாக்டர் ரங்கராஜன் விளக்கம்

**கோவை, அக்.2:** கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனை உடல் பருமன் லேபராஸ்கோபிக் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ரங்கராஜன் கூறியதாவது:

உடல் பருமன் உள்ளவர்கள் அதிகமுள்ள நாட்டில் இந்தியா 3வது இடத்தில் உள்ளது. உடல் பருமனால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மசாலா உணவுகள், மது அருந்துதல், உடல் உழைப்பின்மை ஆகியவற்றால் 5ல் ஒருவர் உடல் பருமனுக்கு ஆளாகின்றனர். இதில் நடுத்தர மக்கள் அதிகளவில் உடல் பருமனுக்கு ஆளாகின்றனர்.



டாக்டர் ரங்கராஜன்

உடல் பருமனால் ஒருவருக்கு அதிக கொழுப்பு, சர்க்கரை நோய், ரத்தக்கொதிப்பு, இருதய நோய், மகப்பேறின்மை, ஆஸ்துமா, கல்லீரல் பாதிப்பு, சிறுநீரக நோய், இரைப்பை நோய், தூக்கமின்மை, மலட்டுத்தன்மை, சிலவகை புற்றுநோய்கள், பக்கவாதம், சமூகத்தால் ஒதுக்கப்படுதல், மன இறுக்கம் ஆகியவை ஏற்படுகிறது.

உடல் எடை குறைக்க அறுவை சிகிச்சை ஒரே தீர்வாக உள்ளது. ஆனால் இது எல்லோருக்கும் தேவைப்படாது. உலக சுகாதார வழிகாட்டுதலின்படி, பிஎம்ஐ 35 முதல் 39க்குள் உள்ளவர்கள், மேற்குறிப்பிட்ட நோய்களில் எதாவது அறுவை சிகிச்சை மேற்கொள்வது நல்லது. பி.எம்.ஐ.,40க்கு மேல் உள்ளவர்கள் கட்டாயம் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

'ஸ்லீவ் காஸ்ட்ரெக்டமி' எனும் லேபராஸ்கோபிக் அறுவை சிகிச்சை உடல் குறைப்புக்கு பொதுவான அறுவை சிகிச்சையாக உள்ளது. ஒருவரின் உணவு உண்ணும் பழக்கத்தால் இரைப்பை பெரிதாகி, அதற்கேற்றாற்போல் உணவின் அளவு அதிகரிக்கிறது. அதுவே உடல் பருமனுக்கு முக்கிய காரணமாகிறது. இரைப்பையின் அளவில் 80 சதவீதத்தை அகற்றுவதே 'ஸ்லீவ் காஸ்ட்ரெக்டமி' எனும் அறுவைச்சிகிச்சையாகும்.

இச்சிகிச்சையின் மூலம் இரைப்பையின் அளவு 20 சதவீதமாக குறைந்துவிடும். குறைந்த அளவிலான இரைப்பைக்கு குறைந்த அளவிலான உணவு உண்டாலே வயிறும், மனமும் நிறைந்துவிடும். இந்த அறுவை சிகிச்சைக்கு பின்னர் 30 முதல் 50 கிலோ எடை படிப்படியாக குறையும். இதன் மூலம் சர்க்கரை, ரத்த அழுத்தம், இதய நோய், மூட்டுவலி, மகப்பேறின்மை, ஆஸ்துமா உள்ளிட்ட உடல் பருமனால் ஏற்படக்கூடிய பல்வேறு நோய்கள் கட்டுப்படும். அதற்கு எடுக்கும் மருந்துகளின் அளவு குறையும்.

இத்தகைய அறுவை சிகிச்சை அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டணத்தில் கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனையில் சிறந்த முறையில் மேற்கொள்ளப்படுகிறது. இச்சிகிச்சைக்குரிய பரிசோதனை, ஆய்வக வசதிகள் மற்றும் அனைத்து துறை மருத்துவரின் ஆலோசனைகள் அனைத்தும் கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனையில் ஒருங்கே அமையப்பெற்றுள்ளது. அறுவை சிகிச்சைக்கு பின்னர் 4 நாளில் வீட்டிற்கு செல்லலாம். இச்சிகிச்சையால் தழும்பு ஏற்படாது. உடலுக்கு நல்ல தோற்றம் கிடைக்கும்.

மேலும் விபரங்களுக்கு, உடல் பருமன் லேபராஸ்கோபிக் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். ரங்கராஜன், கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோவை. போன் : 0422 – 4323672, செல்போன் : 98423 20672 இ–மெயில் : *drrangarajan@kmchhospitals.com* ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

–Advt